# DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
PERUNDURAI

| | |
|---|---|
| Calendar | **C.C.No**.188/2010 |
| Miscellaneous | C.M.P.No |
| Sessions | **S T C No**. |
| Deposition of witness for | Prosecution<br>Defence<br>Court |

Name திரு.பாலசுப்பிரமணி
Father's Name
Village
Taluk
Caste
Calling
Religion
Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

20.11.2018 **அ.சா.1**

**முதல் விசாரணை**

நான் பெருந்துறை, ஈரோடு ரோட்டில் குடியிருந்து அங்கேயே ஓட்டல் மணி ஓட்டல் வைத்து தொழில செய்து வருகிறேன். நான் கட்டிடம் கட்டுவதற்காக கம்பி 2 டன் ஓட்டலுக்கு பக்கத்திலேயே வெளியில் போட்டு வைத்திருந்தேன். கடந்த 13.11.2009 ம் தேதி இரவு 11.00 மணிக்கு எனது ஓட்டல் கடையை மூடிவிட்டு வீட்டிற்கு சென்று தூங்கிவிட்டு மறுநாள் காலை வந்து பார்த்தபோது ஓட்டலுக்கு மேபுறம் போட்டு வைத்திருந்த இரும்பு கம்பிகளை காணவில்லை. பிறகு அக்கம் பக்கம் விசாரித்தேன். எங்கும் கிடைக்கவில்லை என்பதால் பெருந்துறை காவல் நிலையம் சென்று நடவடிக்கை வேண்டி எழுத்துமூலமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் நான் எழுதியதுதான். அந்த புகார் **அ.சா.ஆ.**1. அதன்பிறகு 20.11.2009-ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து எனக்கு தகவல் கொடுத்ததின் பேரில் நான் சென்று பார்த்தேன். திருட்டுப் போன கம்பிகளை பிடித்துவிட்டோம் என்றும் அடையாளம் காட்டுமாறும் கேட்டுக் கொண்டார்கள். நானும் அடையாளம் காண்பித்தேன். நீதிமன்றத்தில் மனு செய்து கம்பிகளை பெற்றுச் சென்றேன். அப்பொழுது புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.**2. (எண்ணிக்கை 3) இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**3-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கம்பியின் அளவு குறித்து நான் புகாரில் சொல்லவில்லை. டி எம் டி கம்பி அது முறுக்கு கம்பியா அல்லது சாதாரண கம்பியா என்று சொல்லவில்லை. மீட்கப்பட்ட கம்பி சாதாரண கம்பியா, முறுக்கு கம்பியா என்று தெரியாது. கம்பியில் ஏற்கனவே டி எம் டி என போடப்பட்டிருந்தது. மீட்கப்பட்ட கம்பியில் டி எம் டி என இருந்தது. புகாரில் டி எம் டி என கம்பியில் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது என்று சொல்லவில்லை. 14.11.2009-ம் தேதி காலையில் கம்பி காணவில்லை என 5.30 மணிக்கு தெரிந்தவுடன் காவல் நிலையம் செல்லவில்லை. அக்கம் பக்கம் விசாரித்தேன். மாலை 5.30 மணிக்குதான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேன். கம்பி வாங்கிய பில்லை போலீசில் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் கம்பி எதுவும் திருடு போகவில்லை என்றும், போலீசார் மீட்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 3-ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**2-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

sd/....

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | |
|---|---|
| Calendar | **C.C.No.**188/2010 |
| Miscellaneous | C.M.P.No |
| Sessions | **S T C No.** |
| | Prosecution |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name மணி
Father's Name
Village
Taluk
Caste
Calling
Religion
Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

20.11.2018 **அ.சா.2**

**முதல் விசாரணை**

நான் பெருந்துறையில் குடியிருந்து வருகிறேன். நான் பழனியாண்டவர் இரும்பு கடையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1-ஐ எனக்கு தெரியும். அவர் கட்டிடம் கட்டுவதற்காக 2009-ம் வருடம் எங்கள் கடையில் இரும்பு கம்பிகளை வாங்கினார். கமடமநா 14.11.2009-ம் தேதி கட்டிடம் கட்டுவதற்காக எங்கள் கடையில் வாங்கிய கம்பிகளை காணவில்லை என்று என்னிடம் கூறினார். நானும் போய்ப் பார்த்தேன். கம்பி அங்கு காணவில்லை. எங்கள் கடையில் வாங்கியவை 2 டன் கம்பிகள் இருக்கும். இது சம்மந்தமாக நடவடிக்கை வேண்டி பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக என்னிடம் கூறிவிட்டு சென்றார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**3-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 20 வருடங்களாக கடையில் பணியாளராக இருக்கிறேன். நாள் ஒன்றுக்கு 10, 20 பேர் கம்பி வாங்கிச் செல்வார்கள். அதனால் யார், எந்த தேதியில் கம்பி வாங்கிச் சென்றார்கள் என்று ஞாபகம் வைத்து சொல்லமுடியாது. பில்லை பார்த்து சொல்ல முடியும். என்ன தேதியில் கம்பி வாங்கினார், அதற்கு யார் பில் போட்டார்கள் என்று தெரியாது. எவ்வளவு கம்பி வாங்கினார், எவ்வளவு தொகை கொடுத்தார் என்று ஞாபகமில்லை. யார்

வந்து கம்பி வாங்கிச் சென்றார்கள் என்று தெரியாது. எந்த வண்டியில் வாங்கி சென்றார்கள் என்றும் தெரியாது. பாலசுப்பிரமணியத்திடம் கம்பி இறக்கியதாக சொன்னார்கள். நேரடியாக தெரியாது. டி எம் டி ஐஎஸ்ஐ கம்பிகள் ஆகும். போலீஸ் விசாரித்தபோது டி எம் டி ஐஎஸ்ஐ கம்பி என்று சொன்னேன். போலீசார் ரசீதின் நகலை வாங்கினார்களா என்ற தெரியாது. நான் சொல்வதுபோல் பாலசுப்பிரமணியத்திற்கு கம்பி விற்கவில்லை என்றும்,நான் சொல்வதுபோல் அந்த இடத்திற்கு கம்பி இறக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பல வழக்குகளில் சாட்சிகள் அளித்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

sd/...

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை

DEPOSITION OF WITNESS
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
PERUNDURAI

| | |
|---|---|
| Calendar | C.C.No.188/2010 |
| Miscellaneous | C.M.P.No |
| Sessions | S T C No. |
| | Prosecution |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name திரு.சு.அர்ச்சுணன்
Father's Name
Village
Taluk
Caste
Calling
Religion
Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

20.11.2018 அ.சா.3

முதல் விசாரணை

நான் தற்போது பெருந்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பெருந்துறை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்ததால் உதவி ஆய்வாளர் கந்தசாமி அவர்கள் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் அவர் தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.11.2009ம் தேதி 17.30 மணிக்கு உதவி ஆய்வாளர் கந்தசாமி பெருந்துறை காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது வாதி பாலசுப்பிரமணியம் த/பெ சென்னியப்பகவுண்டர், ஈரோடு ரோடு முருகன் தியேட்டர், பெருந்துறை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று பெருந்துறை காவல் நிலைய குற்ற எண்.901/2009 இ.த.ச பிரிவுகள் 379 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். பிறகு புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்டு சம்பவ இடத்தை சாட்சிகள் செல்வம், நல்லசிவம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர, மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பிறகு சாட்சிகள் பாலசுப்பிரமணியம், சென்னியப்ப கவுண்டர், மணி, செல்வம், நல்லசிவம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கில் எதிரிகள் மணி, கிருஷ்ணன், தண்டபாணி, செல்வம் ஆகியோர்களை 14.11.2009-ம் தேதி கொடுமுடி காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார்

கைது செய்து சொத்துக்களை கைப்பற்றியும் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பிறகு உதவி ஆய்வாளர் வளர்மதி என்பவர் புலன் விசாரணை மேற்கொண்டு எதிரிகளை சம்பிரதாய கைது செய்துள்ளார். உதவி ஆய்வாளர் பணி மாறுதலில் சென்று விட்டதால் நீதியின் நலன் கருதி, வழக்குக் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 379-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கின் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, பார்வை மகசர், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, 5.

எ.த.கு.வி.

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

sd/....
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை